# அரசினர் கலைக் கல்லூரி (தன்னாட்சி), கும்பகோணம்

Re-accredited with ‘A’ Grade by NAAC & Affiliated to Bharathidasan University

## தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலகம்

சுற்றறிக்கை - 27

நாள்: 04.01.2024

நவம்பர் 2023இல் நடைபெற்ற U.G. & P.G. பருவத்தேர்வு முடிவுகள் **04.01.2024** அன்று வெளியிடப்பட்டன. தேர்வில் வெற்றி பெற்ற அனைத்து மாணாக்கர்களுக்கு மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம். மாணாக்கர்கள் தேர்வு முடிவுகளைத் தத்தம் துறைகளிலும், கல்லூரியின் இணையதளத்திலும் தெரிந்து கொள்ளலாம்.

கல்லூரியின் இணையதள முகவரி: **www.gacakum.ac.in**

மேற்படி இளநிலை மற்றும் முதுநிலை மாணாக்கர்கள் மறுமதிப்பீடு (Revaluation) விண்ணப்பிக்கலாம் எனவும், உரிய விண்ணப்பப் படிவங்களை **05.01.2024** முதல் தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம் எனத் தெரிவிக்கலாகிறது.

மறுமதிப்பீட்டிற்கு விண்ணப்பிக்க விரும்பும் மாணவர்கள் தாள் ஒன்றுக்கு ரூ.400/- செலுத்தி விடைத்தாள் நகல் (Xerox Copy) பெற்ற பின்னரே மறுமதிப்பீட்டிற்கு விண்ணப்பிக்கலாம். ஒருவர் எத்தனைத் தாள்களுக்கு வேண்டுமானாலும் மறுமதிப்பீடு கோரலாம். இதற்கானத் தேர்வுக் கட்டணம் இளநிலை தாள் ஒன்றுக்கு ரூ.500/- மற்றும் முதுநிலை மாணவர்களுக்குத் தாள் ஒன்றுக்கு ரூ.600/- தனியாக செலுத்துமாறு அறிவிக்கலாகிறது.

மேற்படி மறுமதிப்பீடிற்கு விண்ணப்பிக்க விழையும் மாணாக்கர்கள் **12.01.2024** தேதிக்குள் துறைத்தலைவர் வழியாக விண்ணப்பிக்க வேண்டும் எனவும் தெரிவிக்கலாகிறது.

| | |
|---|---|
| தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர் | முதல்வர் |
| தேர்வுக் கட்டுபாட்டு அலுவலர்<br>அரசினர் கலைக்கல்லூரி (தன்னாட்சி)<br>கும்பகோணம்-612 001 | முதல்வர்<br>அரசினர் கலைக்கல்லூரி (தன்னாட்சி)<br>கும்பகோணம்-612 001 |

நகல்: அனைத்துத் துறைத்தலைவர்கள், தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலகம்.
தகவல் பலகைகள், கல்லூரி நூலகம்.